பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

22 09 2017 | 7 15 காலை | செய்தி ஆசிரியர் வி. பழனிசாமி | வெள்ளிக்கிழமை

ஆகாசவாணி -

செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சொந்த தொகுதியான வாரணாசிக்கு இரண்டு நாள் பயணமாக இன்று செல்கிறார். பல்வேறு திட்டங்களை தொடங்கி வைக்கும் அவர், பொதுக்கூட்டத்திலும் உரையாற்ற உள்ளார்.

2. மேற்கு வங்கத்தில் துர்க்கா பூஜை விழாவையொட்டி, மொகரம் பண்டிகை தினம் உள்ளிட்ட அனைத்து நாட்களிலும் துர்க்கை சிலைகளை நீர்நிலைகளில் கரைப்பதற்கு கொல்கத்தா உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

3. வடகொரியாவுக்கு எதிரான தடை நடவடிக்கைகளை அதிகரிக்கும் உத்தரவில் அமெரிக்க அதிபர் திரு டொனால்டு டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

4. உலக அமைதிக்கும், பாதகாப்புக்கும் தீவிரவாதம் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி சுஷ்மா சுவராஜ் கூறியுள்ளார்.

5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 50 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. குல்தீப் யாதவ் ஹாட்ரிக் சாதனை படைத்தார்.

இனி விரிவான செய்திகள்

பிரதமர் திரு நரேந்திரமோடி தமது சொந்த தொகுதியான வாரணாசிக்கு இரண்டு நாள் பயணமாக இன்று செல்கிறார்.

பதல்பூரில் அமைக்கப்பட்டுள்ள கைவினை பொருட்களுக்கான வர்த்தக மையத்தை நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

வாரணாசி வழியாக செல்லும் சூரத் - வதோதரா இடையேயான **Mahamana** விரைவு ரயிலை அவர் கொடி அசைத்து துவக்கி வைக்கிறார்.

சிறு கடன்கள் வழங்கும் உத்கர்ஷ் வங்கியையும் பிரதமர் தொடங்கி வைக்க உள்ளார்.

வாரணாசி மக்களுக்கான ஆம்புலன்ஸ் சேவையை அவர் காணொலி காட்சி மூலம் தொடங்கி வைக்கிறார்.

வாரணாசியின் ரமணா பகுதியில் அமைக்கப்படவுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

இந்த நிலையம் 100 சதவீத மத்திய அரசு நிதியுதவியுடன் அமைக்கப்படுகிறது.

இன்று மாலை வாரணாசியிலுள்ள துளசி மானஸ் ஆலயத்திற்கு சென்று வழிபடுகிறார்.

பின்னர் துர்கா மாதா கோவிலுக்கு செல்லும் அவர், ராமாயணம் தொடர்பான அஞ்சல் தலை ஒன்றையும் வெளியிடுகிறார்.

நாளை வாரணாசி புறநகர் பகுதியில்அமைந்துள்ள **Shahanshahpur** கிராமத்திற்கு செல்லும் பிரதமர் துப்பறவு பணியில் ஈடுபடுகிறார்.

அதை தொடர்ந்து பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி, பொது கூட்டம் ஒன்றிலும் உரையாற்ற உள்ளார்.

*****

மேற்கு வங்கத்தில் நடைபெறும் துர்க்கா பூஜை விழாவையொட்டி, இம்மாதம் 30-ம் தேதி விஜயதசமி நாள் முதல் துர்க்கை சிலைகளை நீர்நிலைகளில் கரைப்பதற்கு கொல்கத்தா உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மொகரம் நாளான அக்டோபர் 1-ம் தேதி உட்பட அனைத்து தினங்களிலும், சிலைகளை கரைக்க நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

சிலை கரைப்பு நிகழ்ச்சிகளின்போது மேற்கு வங்கு அரசு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து தரவேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

துர்க்கா சிலையை ஊர்வலமாக எடுத்து செல்லும் பாதைகள், கரைப்பதற்கான இடங்கள் ஆகியவற்றை வரையறை செய்து தரவேண்டும் என்றும் கொல்கத்தா உயர்நீதிமன்றம் மாநில அரசுக்கு அறிவுறுத்தியுள்ளது.

*****

குடியரசுத் தலைவர் திரு ராம்நாத் கோவிந்த் ஒரு நாள் பயணமாக மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூருக்கு இன்று செல்கிறார்.

அம்பேத்கரின் நினைவிடமான தீக்ஷா பூமியில் அஞ்சலி செலுத்தும் அவர், **Kamptee**-யில் தியான மையம் ஒன்றையும் திறந்து வைக்கிறார்.

**Reshimbagh**-ல் அமைக்கப்பட்டுள்ள பரத நாட்டிய சபை ஒன்றையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

திரு ராம்நாத் கோவிந்த் குடியரசுத் தலைவராக பதவியேற்ற பின்னர் மகாராஷ்டிரா செல்வது இதுவே முதல்முறை.

*****

கர்நாடக நீர் பாசனத்துறை அமைச்சர் திரு எம் பி பாட்டீல் காவிரி நதி நீர் பிரச்சினை தொடர்பாக சட்ட நிபுணர்களுடன் புதுதில்லியில் வரும் திங்கட்கிழமை ஆலோசனை நடத்த உள்ளார்.

உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கில் கர்நாடக அரசு தரப்பில் ஆஜராகும் வழக்கறிஞர்களுடனும் அவர் விவாதிக்க உள்ளார்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கு கர்நாடக அரசு எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது குறித்து இந்த ஆலோசனை கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

*****

மத்திய அரசுக்கு சொந்தமான **Mazagon Dock** நிறுவனம் வடிவமைத்த அதிநவீன நீர்மூழ்க்கி கப்பல் மும்பையில் இந்திய கடற்படையிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

ஐ என் எஸ் கல்வாரி என்ற இந்த நீர்மூழ்கி கப்பல் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்படும் என்று உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீர்மூழக்கி கப்பல் திட்டத்தில் இது ஒரு மைல் கல் என்று கடற்படையின் மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

*****

மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்றுவது தொடர்பாக ராஷ்டிரிய ஜனதா தளம் மற்றும் சமாஜ்வாதி கட்சிகளுடன் காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி பேச வேண்டும் என்று பிஜேபி கூறியுள்ளது.

கட்சியின் செய்தி தொடர்பாளர் ஜி வி எல் நரசிம்மராவ் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் காங்கிரஸின் கூட்டணி கட்சிகளான ராஷ்டிரிய ஜனதாதளமும், சமாஜ்வாதியுமே மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவுக்கு தடையாக விளங்குகின்றன என்றார்.

முன்னதாக இந்த மசோதாவை மக்களவையில் விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு திருமதி சோனியா காந்தி கடிதம் எழுதியிருந்தார்.

*****

உலக அமைதிக்கும், பாதுகாப்புக்கும், தீவிரவாதம் பெரிய அச்சுறுத்தலாக விளங்குகிறது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி சுஷ்மா சுவராஜ் கூறியிருக்கிறார்.

ஐ.நா. பொது சபை கூட்டத்தில் பங்கேற்க நியூயார்க் சென்றுள்ள அவர், பிரிக்ஸ் நாடுகளின் அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தில் கலந்துகொண்டார்.

அப்போது பேசிய அவர், தீவிரவாதத்தை தேசிய கொள்கையாக கொண்ட நாடுகள் பயங்கரவாதிகளுக்கு ஆதரவு அளித்து வருவதாக குற்றம் சாட்டினார்.

தீவிரவாத செயல்களை தடுப்பதற்கும், தீவிரவாத குழுக்களுக்கான நிதியுதவியை தடுத்து நிறுத்துவதற்கும் கூட்டு நடவடிக்கை தேவை என்று அவர் வலியுறுத்தினார்.

சர்வதேச சூரிய எரிசக்தி கூட்டமைப்புக்கும், புதிய வளர்ச்சி வங்கிக்கும் இடையே ஒத்துழைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி ஆலோசனை தெரிவித்திருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கான செயல்வடிவத்தை பிரிக்ஸ் நாடுகள் ஏற்படுத்தும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

சர்வதேச நிதியம் மற்றும் ஐ.நா. பாதுகாப்பு குழுவின் சீர்த்திருத்தங்களை ஏற்படுத்த பிரிக்ஸ் நாடுகள் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று திருமதி சுஷ்மா சுவராஜ் கேட்டுக்கொண்டார்.

ஆப்கானிஸ்தானில் தொடர்ச்சியாக நடைபெறும் வன்முறை சம்பவங்கள் சவாலாக உள்ளது என்று கூறிய அவர், வடகொரியாவின் நடவடிக்கைகள் உலக அளவில் கவலையை ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவித்தார்.

*****

ஆப்கானிஸ்தானில் 31 மாகாணங்களில் 116 சமூக மேம்பாட்டு திட்டங்களை இந்தியா செயல்படுத்த உள்ளது.

ஐ.நா. பொது சபை கூட்டத்தில் பங்கேற்க நியூயார்க் சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி சுஷ்மா சுவராஜ், ஆப்கானிஸ்தான் அதிபர் அஷ்ரப் கனியை சந்தித்து பேசிய போது, இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதுகுறித்து புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு ரவீஷ்குமார், வெளிநாடுகளிலிருந்து ஆப்கானிஸ்தானுக்கு திரும்பும் அகதிகளுக்கு குறைந்த செலவில் வீடு கட்டி கொடுக்கும் திட்டம், சாலை வசதி மேம்படுத்தும் திட்டம் உள்ளிட்டவற்றுக்கு இந்தியா உதவி வழங்க உள்ளது என்றார்.

*****

ஐ நா சபை மற்றும் ஐ நா பாதுகாப்பு கவுன்சிலின் சீர்த்திருத்தங்களை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி சுஷ்மா சுவராஜ் வலியுறுத்தியுள்ளார்.

நியூயார்க் சென்றுள்ள அவர், இந்தியா, பிரேசில், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையேயான முத்தரப்பு கூட்டத்தில் பேசுகையில், உலக வர்த்தக நிறுவனத்துடன் மேற்கொள்ளப்படும் வர்த்தக நடவடிக்கைகள் வெளிப்படைத்தன்மையுடன் அமையும் என்று இப்சா கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள 3 நாடுகளும் நம்புவதாக தெரிவித்தார்.

*****

வடகொரியாவுக்கு எதிரான தடை நடவடிக்கைகளை மேலும் அதிகரிக்கும் உத்தரவில் அமெரிக்க அதிபர் திரு டொனால்டு டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

வடகொரியாவுடன் வர்த்தக உறவுகளை வைத்திருக்கும் நிறுவனங்களை குறி வைத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய திரு டிரம்ப் தென்கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த நடவடிக்கை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

சீனாவின் மத்திய வங்கி வடகொரியாவுடனான நிதி பரிவர்த்தனைகளை நிறுத்தியதற்கு பாராட்டு தெரிவித்த அவர், இது துணிச்சலான நடவடிக்கை என்று கருத்து தெரிவித்தார்.

*****

வடகொரியாவால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அந்நாட்டுடன் பேச்சு நடத்துவது ஒன்றே தீர்வாக அமையும் என்று சீன வெளியுறவுத்துறை அமைச்சர் திரு **Wang Yi** கூறியுள்ளார்.

நியூயார்க்கில் நடைபெறும் ஐ நா பொது சபை கூட்டத்தில் பேசிய அவர், அமைதிக்கான நம்பிக்கை நீடிப்பதாக தெரிவித்தார்.

அமெரிக்காவும், ஜப்பானும் வடகொரியாவுக்கு எதிராக கடுமையான நிலைபாட்டை எடுத்துள்ள நிலையில் சீன வெளியுறவுத்துறை அமைச்சர் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

*****

டோக்கியோவில் நடைபெறும் ஜப்பான் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்திய வீரர்கள் இன்று 3 ஆட்டங்களில் பங்கேற்கின்றனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் டென்மார்க்கின் **Viktor Axelsen**-னை எதிர்கொள்கிறார்.

மற்றொரு காலிறுதி போட்டியில் இந்தியாவின் எச் எஸ் பிரனாய், சீனாவின் **Shi Yuqi**-யுடன் மோதுகிறார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் பிரனாவ் ஜெரி சோப்பா – சிக்கி ரெட்டி இணை தென் கொரியாவின் **Seung Jae Seo – Kim Ha Na** -இணையுடன் மோதுகிறது.

*****

செயின்ட் பீட்டர்ஸ் பர்க் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் - புரவ் ராஜா இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

அரையிறுதி போட்டியில் இந்த இணை சிலியின் பெரால்டா – அர்ஜென்டினாவின் **Zeballos** இணையுடன் மோத உள்ளது.

*****

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 50 ரன் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற இந்த போட்டியில், முதலில் பேட் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 252 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

விராட்கோலி 92 ரன்னும், ரஹானே 55 ரன்னும் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தனர்.

253 ரன் என்ற வெற்றி இலக்குடன் அடுத்து களமிறங்கிய ஆஸ்திரேலியா, 43 புள்ளி ஒரு ஓவரில் 202 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

குல்தீப் யாதவ் 3 விக்கெட்டுகளை அடுத்தத்து வீழ்த்தி ஆட்ரிக் சாதனை படைத்தார்.

ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய தரப்பில் கபில்தேவ் மற்றும் சேத்தன் சர்மாவுக்கு அடுத்தபடியாக குல்தீப் யாதவ் இந்த சாதனையை படைத்துள்ளார்.

இரு அணிகளுக்கு இடையேயான 3வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இந்தூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

*****